1972 டிசம்பர் 15]

வந்திருக்கின்றன. இப்படிப்பட்ட தவறுகளைத் தவிர்ப்பதுதான் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. காரணம் அந்தப் பட்டியலிலிருந்து பெயரை அனுப்பும்போது சில சந்தர்ப்பங்களிலே தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. 'வேறு ஒரு பட்டியலிலிருந்து அனுப்பிவிட்டோம்' என்று சொல்லப்பட்டு விடுகிறது. இப்படிப்பட்ட தவறுகளைத் தவிர்ப்பதற்கு என புதியதொரு முறையினைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றோம். எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சில் நிரந்தரமாக ஒரு பட்டியல் தயார் செய்து அப்படிப்பட்ட பட்டியலை ஒவ்வொரு இலாகாவிற்கும் அனுப்பிவிட்டு, அந்தப் பட்டியலில் உள்ளவர்களுக்கு எப்போது எப்போது வேலை அளிக்கப்படுகிறதோ அப் போது அவர்களுடைய பெயர்களை அந்தப் பட்டியலிலிருந்து நீக்கிவிடலாம். அந்தப் பட்டியலிலிருந்து யாரை வேண்டுமானாலும் அவர்கள் முறைப்படி தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்று அந்தந்த இலாக்காக்களுக்கு ஒரு வாய்ப்பினை அளித்துவிட்டால், இப்போது எம்ப்ளாய்மெண்டு எக்ஸ் சேஞ்சுகளில் தவறுகள் நடந்துவிட்டது என்று சுட்டிக் காட்டும் வாய்ப்பு குறையுமா என்று முயற்சி எடுத்துக்கொண்டு வருகின்றோம். அது வெற்றி பெறுமா என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

Starting of New Industries

*£79 *Q.*—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Government of India have issued an order that the State Governement should not start any new industries; and

(*b*) if so, the details thereof?

புதிய தொழில் தொடங்குதல்

திரு எ. ஆர். தாமோதரன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதிய தொழில் எதனையும் மாநில அரசு தொடங்கக் கூடாது என இந்திய அரசு ஆணை பிறப்பித்துள்ள தென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

The Hon. Thiru S. MADHAVAN: (*a*) No.

(*b*) Does not arise.

£ Postponed from the list of questions for 6th December 1972.